செ.வெ.எண். 81 நாள்: 31.08.2019

**9.4.2019 அன்று 100 - சதவிகிதம் வாக்களிப்பதின் அவசியத்தை சமூகத்திற்கு உணர்த்தும் வகையில் கிருஷ்ணகிரி அரசு மகளிர் கல்லூாி முதல்வர், மற்றும் பேராசிரியர்களின் ஒருங்கிணைப்பில்**

**மாணவியர்கள் இந்திய தேர்தல் ஆணைய குறியீட்டை மூவர்ணக் கொடி வர்ணத்தில் அணிவகுத்து நின்றதையடுத்து கிருஷ்ணகிரி அரசு மகளிர் கல்லூாிக்கு கின்னஸ் சாதனை விருது**

**மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர். சு.பிரபாகர் இ.ஆ.ப அவர்கள் கின்னஸ் சாதனை விருதை கல்லூாிக்கு இன்று ( 31.08.2019) வழங்கி பாராட்டு.**

கிருஷ்ணகிரி அரசு மகளிர் கலைக்கல்லூாியில் , ஜே.சி.ஐ. கிருஷ்ணகிரி மேங்கோ டவுன் மற்றும் கல்லூாி இணைந்து அசிஸ்ட் வேர்ல்டு ாிகார்டு ( ASSIST WORLD RECORD) பெற்றமைக்காக சான்றழிப்பு விழா மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.சு.பிரபாகர் இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் இன்று (31.08.2019) நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் செள.கீதா அவர்கள் வரவேற்புரை வழங்கினார். முதல்வர் முனைவர் ரு.ரா.ஜெயந்தி அவர்கள் சிறப்புரையாற்றினார்.

**பின்பு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் விருது சான்றிதழை கல்லூாிக்கு வழங்கி பேசும் போது:**

கடந்த நாடாளுமன்ற தேர்தல் 2019- யொட்டி இக்கல்லூாி வளாகத்தில் 9.4.2019 அன்று 100 சதவிகிதம் வாக்களிப்பதின் அவசியத்தை சமூகத்திற்கு உணர்த்தும் வகையில் இக்கல்லூாி முதல்வர், மற்றும் பேராசிரியர்களின் ஒருங்கிணைப்பில் மாணவியர்கள் இந்திய தேர்தல் ஆணைய குறியீட்டை மூவர்ணக் கொடி வர்ணத்தில் எனது தலைமையில் ( மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.சு.பிரபாகர் இ.ஆ.ப.) அணிவகுத்து நின்றனர். பின்பு இந்நிகழ்ச்சி குறித்து ஜே.சி.ஐ. சார்பாக கின்னஸ் சாதனை விருதிற்கு அனுப்பி வைக்கப்பட்டது. அச்சாதனை உறுதி செய்யப்பட்டு அதற்கான சான்று கல்லூாிக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த சாதனை நிகழ்த்திய கல்லுாி முதல்வர், பேராசிரியர்கள் மற்றும் மாணவியர்களுக்கு எனது வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் மேலும் இக்கல்லூாி மாணவியர்கள் பல்வேறு சாதனைகளை நிகழ்த்தி இக்கல்லூாி பெருமை சேர்த்திட வேண்டும். அதேப்போல் நல்ல கல்வி கற்று சிறந்த வேலை வாய்ப்புகளை பெற்று தங்களின் வாழ்க்கை சிறப்பாக அமைத்துக்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.சு.பிரபாகர் இ.ஆ.ப. அவர்கள் பேசினார்.

தொடர்ந்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவிக்கும் : செப்டம்பர் 1ம் தேதி முதல் 30ம் தேதி வரை மாவட்டத்தில் உள்ள அனைத்து பகுதியிலும் வீடு வீடாக வாக்காளர் பட்டியல் சரிசெய்யும் பணியில் வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் மேற்கொள்ள உள்ளார்கள்.

வாக்காளர்கள் தங்களுடைய புகைபடம்/பெயர் திருத்தம் மற்றும் முகவரி மாற்றம் உள்ளிட்ட திருத்தங்களை செய்துகொள்ளலாம். மாணவியர்கள் இந்த பணிகள் குறித்து பொதுமக்களிடம் எடுத்துரைக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் ஜே.சி.ஐ. தன்னம்பிக்கை பேச்சாளர் திரு.இரா .நந்தகுமார், ஜே.சி.ஐ. தலைவர் திரு. மஞ்சுநாத், ஜே.சி.ஐ. மண்டல இயக்குநர் திரு.சி.அசோக்குமார், ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.மு.சேகர் அவர்கள் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார். நிகழ்ச்சியின் நிறைவாக ஆங்கிலத்துறைத் தலைவர் திருமதி.ம.கல்பனா அவர்கள் நன்றியுரையாற்றினார். மேலும் கல்லூரி மாணவியர்கள் அனைவரும் கலந்துகொண்டனர்.

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் கிருஷ்ணகிரி.